பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51381 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 21 (6—11—72) திங்கள் வெளியூர்: ஐப்பசி 22 (4—11—72) செவ்வாய் [இதழ்: 118

கட்சிமாறுவதைத் தடைசெய்யும் சட்டம்

போபால், நவ. 6—

சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறுவதைத் தடை செய்வதென்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; அப்படிக் கட்சிமாறும் உறுப்பினர்களின் பதவி பறிபோய்விடும்.

இதற்கு வகை செய்யும் -- கட்சி மாறும் தடைச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

"இத்திங்கள் தொடங்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இச்சட்டம் கொண்டுவரப்படும்"

எத்தர்களின் புரட்டு எத்தனை நாளைக்கு?

ஒரு சினிமா நடிகர் நினைத்தால் ஒரு கட்சியை ஆட்சியில் அமர்த்திவிடவும்முடியும்--ஆட்சியிலிருந்து அகற்றிவிடவும் முடியும் என்றால், ஒன்று -- இதை நம்புபவன் முட்டாளாக இருக்க வேண்டும் அல்லது அப்படிச் சொல்லுபவன் முட்டாளாக இருக்கவேண்டும்.

'தி. மு. கழகத்தை ஆட்சியில் அமர்த்தியவன் நான்தான்' என்கிறார் சினிமா நடிகரான எம். ஜி. இராமச்சந்திரன்.

'இப்போது எனக்கு தி. மு. க. ஆட்சி பிடிக்கவில்லை -- அதை அகற்றவேண்டும் --- அகற்றிக் காட்டப்போகிறேன்' என்கிறார்!

தி. மு. க. ஆட்சியை அகற்றப் 'பெருந்தலைவர்' காமராசர் முதல் பக்தவத்சலங்கள் -- குமரமங்கலங்கள் -- கல்யாணசுந்தரங்கள் வரைபடாதபாடுபட்டுப் பார்த்து விட்டார்கள்; இப்போதும் இந்தப் புரட்சித்தலைவர்கிளம்பியிருக்கிறார்!

அவர்களாவது கட்சி -- அமைப்பு ரீதியாக நெடுநாள் அரசியல் நடத்திவரும் அரசியல்வாதிகள்; புதிதாக முளைத்துள்ள இந்தப் 'பு--ர்--ர--ட்--சி--த் தலைவ'ரோ, 'கட்சி -- அமைப்பு எல்லாம் நானே' என்கிறார்! பொழுது விடிந்து பொழுதுபோனால் நிருபர்களை அழைத்து வைத்துக் கொண்டு, 'பழைய சினிமா வசனங்களை ஒப்புவித்து 'அரசியல்' நடத்திக்கொண்டிருக்கிறார்!

காமராசரால் முடியாததை -- கல்யாணசுந்தரத்தால் இயலாததை -- இந்தப் புரட்சி வீரர் செய்து காட்டப் போகிறாராம்!

'இந்த மலையை என் தலையால் தூக்கப்போகிறேன்' என்றான் -- எத்தன் ஒருவன்; அதற்காக ஒருமாதம் 'தயார் தீனி' தின்ன வேண்டும் என்றான்; அவன் சொன்னதை நம்பி ஊரில் உள்ளவர்களெல்லாம் முறைவைத்துக் கொண்டு ஒரு மாத காலம் -- நாள்தோறும் அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துத் தின்னச் செய்தார்கள்; ஒரு மாதம் முடிந்ததும், 'மலையைத் தலையில் தூக்கப்போகிறான் மாவீரன்' என்று ஊரார் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்; நாட்கள் முப்பதும் முடிந்தன; ஊர் கூடியது; வீரனை அழைத்து, 'மலையைத் தூக்கு' என்றார்கள் ஊரார்; 'நான் மலையை என் தலையில் தூக்கத் தயார்: மலையைத் தூக்கி என் தலையில் வையுங்கள்' என்றான்!

மலையைத் தூக்கி அவன் தலையில் வைப்பவர் யார்?

ஊரை ஏமாற்றி ஒருமாதம் வயிறு புடைக்கத் தின்று தீர்த்த அந்த எத்தனுக்கு, ஊரார் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து -- 'பாதுகா பட்டாபிஷேகம் நடத்தி அனுப்பினார்கள்!

'பட்டாபிஷேகம் கிடைத்தாலும், தின்றவரையில் இலாபம்' என்ற திருப்தியோடு எத்தன் ஓட்டமெடுத்தான்!

இது சின்னபிள்ளைகளுக்குச்சொல்லப்படும் கற்பனைக் கதைதான் என்றாலும், பொருள் பொதிந்தது!

ஏமாளிகள் இருக்கும் வரையில் எத்தர்களும் இருக்கத்தான் செய்வார்கள்!

'கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பாருக்கு எங்கே போயிற்று புத்தி' என்பதும் இதற்காகத்தான்!

'மலையைத் தூக்குகிறேன்' என்ற எத்தனுக்கும் -- 'ஆட்சியை அகற்றப் போகிறேன்' என்று கூறும் சினிமா நடிகருக்கும் என்ன வித்தியாசம்?

ஆரம்பத்தில் ஏமாளிகளாக இருந்துவிட்ட ஊரார், தங்கள் ஏமாற்றத்தை உணர்ந்தபின், அந்த எத்தனை விரட்டியடிக்கத் தவறவில்லை! அது தமிழக அரசியலிலும் நடக்காமல் போகாது!

சினிமா நடிகரின் அரசியல் ஸ்டண்ட் இன்னும் எத்தனை நாளைக்கு?

'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பார்கள்; இந்த அரசியல் எத்தர்களின் புளுகு எண்ணி எட்டு மணி நேரம் கூடத் தாக்குப் பிடிப்பதில்லை!

"அங்கே ஐயாயிரம் பேர் என் கட்சியில சேர்ந்தார்கள் -- இங்கே பத்தாயிரம் பேர் சேர்ந்தார்கள்; இதோ எங்கள் எம்.பி.-க்கள் பட்டியல் -- அதோ எங்கள் எம்.எல்.ஏ.-க்கள் பட்டியல்; ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இத்தனைப் பேர் -- வட்டச் செயலாளர்கள் இத்தனைப் பேர்" என்றெல்லாம் அவர் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுப்பதும், அடுத்த நாளே சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புச் செய்திகள் விடுப்பதும், தமிழ்நாட்டு அரசியலில் உண்மையிலேயே ஏற்பட்டுள்ள புரட்சிதான்!

அதிலும் இந்தப் பத்திரிகைகள், அந்த அரசியல் எத்தருக்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் -- புரிகின்ற தியாகங்களோ சொல்லி முடியாது!

'தமிழ்நாட்டையே அதிரவைக்கும் புரட்சி நடக்கப் போகிறது -- பத்தாந்தேதி பாருங்கள்' என்றார் -- புரட்சியின் 'கதாநாயகர்'; 'ஆமாம் -- ஆமாம்' என்கிறார்கள் -- பரம்பரை அரசியல் கட்சித் தலைவர்! இந்த வேடிக்கையை என்னென்று சொல்லுவது!

தமிழ்நாட்டில் நாலரை கோடி மக்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவரும் நினைத்தால் தான், எந்தப் புரட்சியும் நடக்கும் என்பது ஏனோ அவர்களுக்குப் புரியவில்லை!

புதுக் கதாநாயகருக்கோ, 'ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும்' என்ற 'வெறி' தலைக்கேறிவிட்டிருக்கிறது; அவருக்குப் பக்கவாத்தியம் வாசிக்க முன்வந்துள்ள அரசியல் தலைவர்களுக்கோ, "என்ன ஆனாலும் சரி -- 'பைத்தியக்காரன் கிழித்தது கோவணத்துக்கு ஆச்சு' என்ற பழமொழிப்படி -- எப்படியாவது தி. மு. க. ஆட்சி கவிழ்ந்தால் சரிதான்" என்று எண்ணுகிறார்கள்!

'நினைத்ததை முடிப்பவன்' என்பதும் -- 'நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்....' என்பதும் சினிமாவில் பாடிய பாட்டு;

(4-ம் பக்கம் பார்க்க)

வீராதி வீரர்களின் கோழைத்தனம்

துரோகிகளைத் தமிழகம் மன்னிக்காது

சென்னை, நவ. 6—

"'ஊழல் -- ஊழல்' என்கிறார்கள்; அதுபற்றி ஏதோ மகஜர் தயாரித்து ஆளுநரிடம் கொண்டுபோய்க் கொடுத்து, 'இதை நேரே குடியரசுத் தலைவருக்கு அனுப்புங்கள்' என்று கூறியிருக்கிறார்கள் -- எம். ஜி. ஆரும், வலது கம்யூனிஸ்டுத் தலைவரான கல்யாணசுந்தரமும்.

"அரசியல் சட்டப்படி, எந்த மாநில கவர்னரிடம் மகஜர் தரப்பட்டாலும், அதை அந்த மாநில முதல்வரிடம் தந்து -- அவர் ஒப்புதல் தந்தால்தான் குடியரசுத் தலைவரிடம் அனுப்புவது என்று ஒரு 'முறை' இருக்கிறது; எனவே ஆளுநர், 'உங்கள் மகஜரைக் கொடுங்கள்; அதை முதல்வரிடம் அனுப்பி வைக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்; 'அப்படியானால் வேண்டாம்; நாங்களே கொண்டுபோய் குடியரசுத் தலைவரிடம் கொடுத்து விடுகிறோம்' என்று அப்படியே போயிருக்கிறார்கள்.

முதல்வரிடம் தந்தால் என்ன? அந்த வீராதி வீரர்களுக்கு ஏன் இந்தக் கோழைத்தனம்?

"பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்த கழகத்திற்கு எதிராக-- கழக ஆட்சிக்கு எதிராக அவர்கள் செய்துவரும் வஞ்சகத்தை-- துரோகத்தை--சூழ்ச்சியை ஒருபோதும் தமிழக மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்!"

--பேராசிரியர் க. அன்பழகன்

(சென்னை 25-வது வட்டக் கூட்டத்தில்)

கழகத்தை அழிக்க எவராலும் இயலாது

★

சலசலப்புக் கண்டு அஞ்சிட வேண்டாம்

கழகத் தோழர்கட்குக் கலைஞர் வேண்டுகோள்-- கம்யூனிஸ்டுகளுக்கு எச்சரிக்கை

சென்னை, நவ. 6—

"எங்கே சிறுசிறு சலசலப்புத் தோன்றினாலும்--கழக ஆட்சிக்கு எதிராகச் சிறிய சிறிய பிரச்சினைகள் எழுந்தாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கம்யூனிஸ்டுகள் முனைந்துகொண்டு வருகிறார்கள்.

"அவர்களுக்குக் கழகத்தின் சார்பில் எச்சரிக்கின்றேன்-- அறிவுறுத்துகின்றேன்--'கழகத்தை அவ்வளவு எளிதில் அழித்துவிட முடியாது; இது கட்டுக்கோப்பான கட்டிடம்; கட்டுப்பாடு மிகுந்தது; கடமை--கண்ணியம்--கட்டுப்பாடு இவைகளைப் போற்றக்கூடியது' என்று!

'ஆகவே கழக நண்பர்களே--உங்களுடைய பணியைத் தொடர்ந்து ஆற்றுங்கள்; உங்களுடைய வேலை மகத்தானது; மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்; நகர்ப்புறத்தில் இருப்போரே--தெருத் தெருவாகச் சென்று திண்ணைகளில் அமர்ந்து விஷயங்களை விளக்குங்கள்; கிராமப்புற நண்பர்களே -- உண்மை நிலைமைகளை ஊருக்கு எடுத்துச் செல்லுங்கள்; 'நம்முடைய கழகத்தை-- அண்ணா அவர்கள் உருவாக்கிய கழகத்தை யாராலும் அழிக்க முடியாது' என்கின்ற வி... ...த எடுத்துக்கொள்ளுங்கள்!"

என்று, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை 25-வது வட்டத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டி வலியுறுத்தினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஒரு கட்சியை உருவாக்குவது என்பது, ஏதோ நான்கைந்து பேர் கூடி -- ஐந்தாறு பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, வளர்த்துவிடும் என்பதல்ல.

உருவாகின்ற கட்சி தன் குறிக்கோளைச் சொல்லவேண்டும்.

தன்னை வளர்த்துக்கொள்வதை விட்டுவிட்டு -- தன்னை ஆளாக்கிய தாய்க் கழகத்தை அழிப்பதுதான் முதல் குறிக்கோள் என்று ஒரு புதிய கட்சி உருவாகுமானால், என்ன அர்த்தம்? அந்தக் கட்சித் தன்னுடைய கொள்கை -- குறிக்கோள் -- கோட்பாட்டை மக்கள் முன்னால் வைத்து, இவைகளுக்காக எங்கள் கட்சி போராடும் -- வாதாடும் என்று கூறி, கட்சியின் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதுதான் உண்மையிலே ஒரு கட்சியினை வளர்க்க வேண்டுமென்று விரும்புகின்றவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

'பாப விமோசனம்' தேடுகிருர் பக்தவத்சலம்!

" தி. மு. க. அரசு போதுவாகவே பத்திரிகைகளிடம் வெறுப்புக் காட்டி வருகிறது! ஆனல் பத்திரிகைகளைப் புறக்கணித்து எந்த அரசாங்கமும் மக்களை ஆளமுடியாது என்பதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்."

—பக்தவத்சலம்

யார் இந்த பக்தவத்சலம் என்று சந்தேகப்பட வேண்டாம். முன்னாள் முதல்வர் — சாட்சாத் எம். பக்தவத்சலம்தான்!

தி. மு. க. அரசு பத்திரிகைகளிடம் வெறுப்புக் காட்டுகிறதா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும்; பத்திரிகைகளைப் புறக்கணித்து எந்த அரசும் மக்களை ஆளமுடியாது என்ற ஞானோதயம் இவருக்கு எப்போது ஏற்பட்டது?

முதலமைச்சராக இருந்து அனுபவப்பட்டவர் அல்லவா? தனது சொந்த அனுபவத்தைத்தான் கூறியிருக்கிருர்!

அனுபவத்தால் மட்டுமல்ல -- இப்போது அவர் வெறும் எம். பக்தவத்சலம் அல்லவே! ஒரு பழம்பெரும் பத்திரிகையின் 'கௌரவ' ஆசிரியர் பக்தவத்சலம் அல்லவா? இது எல்லோருக்கும் எங்கே நினைவுக்கு வரப்போகிறது!

தாம் முதலமைச்சராக இருந்தபோது எந்தெந்தப் பத்திரிகைகளின்மீது அடக்குமுறைகளைப் பயன்படுத்தி -- வழக்குகள் போட்டுத் தொல்லை கொடுத்தாரோ, அந்தப் பத்திரிகைகளில் ஒன்ருன 'சுதேசமித்திர'னுக்கே இப்போது அவர் கௌரவ ஆசிரியராகிவிட்டாரே -- இப்போது அவர் வேறு எப்படிப் பேச முடியும்?

இன்னும் சொல்லப்போனல், அவர் ஒரு வழக்கறிஞர் அல்லவா? 'கேசு'க்கும் -- கிடைக்கின்ற 'பீசு'க்கும் ஏற்ற நாக்கை வளைத்துப் பழக்கப்பட்டவர்தானே!

முதல்வராக இருந்தபோது பத்திரிகைகளைச் சாடினர் — பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒடுக்கப் பார்த்தார்! தனது ஆட்சிக்கு எதிரான — இந்தி எதிர்ப்புச் செய்திகளை வெளியிட்டதற்காகவே, நாட்டுப் பாதுகாப்புச் சட்டப்படி, 'முரசொலி' ஆசிரியர் திரு. மாறன் அவர்களைக் கைது செய்தார்; 'முரசொலி'மீது வழக்குத் தொடர்ந்தார்; அதேபோல், 'மாலைமணி' — 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளின்மீதும் வழக்குப் போட்டார்! அப்போது, பத்திரிகைகளைப் பார்த்தாலே பக்தவத்சலத்துக்குச் 'சிம்ம சொப்பனமாக' இருந்தது!

இப்போது, 'பத்திரிகாசிரியர்' என்ற நிலையில் பத்திரிகைகளுக்காகப் பரிந்து பேச ஆரம்பித்திருக்கிருர் — அவ்வளவுதான்! இதைத் தவிர, பக்தவத்சலத்தின் கூற்றுக்கு வேறு பொருளோ பொருத்தமோ இல்லை!

'பதவி' இழந்து — 'பவிசு' இழந்து மூலையில் உட்கார்ந்துகிடந்த நேரத்தில், எதிர்பாராமல் வந்த பதவியை விட்டுவிடலாமா என்று நினைத்து — அந்தப் பத்திரிகைக்குக் 'கௌரவ ஆசிரியராக' ஆகியிருக்கிருர்!

அதவும், தன்னல் பழிவாங்கப்பட்ட பத்திரிகையே தன்னை கௌரவ ஆசிரியராக அமர்த்திக் கொண்டிருக்கும்போது, பத்திரிகைகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசாமல் வேறு என்ன பேசுவார்?

நல்ல வேளை! அந்தப் பத்திரிகைக்காரர்கள் புத்திசாலித்தனமாகப் பக்தவத்சலத்தை, வெறும் 'கௌரவ ஆசிரியராக' மட்டுமே வைத்திருக்கின்றனர். பத்திரிகையின் பொறுப்பு ஆசிரியராகவே ஆக்கியிருந்தால், அவருடைய 'எழுத்தை' அந்தப் பத்திரிகையும் தாங்காது — நாடும் தாங்காது என்பது அவர்களுக்குத் தெரியும்!

ஏதோ — 'கௌரவ ஆசிரியர்' என்ற முறையில் தனக்கு அவ்வப்போது ஏற்படும் அரிப்பை ஏதாவது எழுதிப் போக்கிக் கொள்ளட்டும் என்று கருதி, அந்தப் பத்திரிகையில் இந்தப் பக்தவத்சலத்துக்கென ஓர் இடத்தை ஒதுக்கித் தந்திருக்கிருர்கள் — அவ்வளவுதான்!

இதை வைத்துக்கொண்டுதான் ஸ்ரீமான் பக்தவத்சலம், தன்னை ஏதோ ஒரு பெரிய மேதை என்று கருதிக்கொண்டு, நாள் தவருமல் 'தனது கருத்து'க்களை உதிர்த்துக்கொண்டு வருகிருர்!

எழுத்தாலும் -- பேச்சாலுமே எல்லாம்வல்ல எதேச்சாதிகார காங்கிரசு ஆட்சியை வீழ்த்திக் கழக ஆட்சியை ஏற்படுத்திய கழகத்தவருக்கு, பத்திரிகைகளின் அருமை பெருமைகளை மற்றி — பேச்சுரிமை, எழுத்துரிமைகளைப் பறித்த பக்தவத்சலத்தைவிட நன்ருகத் தெரியும்!

பத்திரிகைகளைப் புறக்கணிக்கும் வகையில் இந்த அரசு என்றும் நடந்ததும் இல்லை — இனியும் நடக்காது!

பத்திரிகைகளுக்காக இப்போது பரிந்து பேசுவதன்மூலம், முன்பு பத்திரிகைகளுக்குத் தாம் இழைத்த அநீதிக்குப் 'பிராயச்சித்தம்' தேடிக்கொள்ளலாம் என்று பக்தவத்சலம் நினைக்கக் கூடும்; அவர் இனி என்ன பேசினலும் — எழுதினலும், அவர் செய்த 'பாவ'ங்களுக்கு விமோசனமே கிடைக்காது! அவருடைய முன்னள் நடவடிக்கைகளைப் பொதுமக்கள் மறந்துவிட்டிருந்தாலும் பத்திரிகைகள் மறந்துவிடப் போவதில்லை!

—'சேனு'

'சொத்துக் கணக்கைக் காட்ட நான் தயார்'

'உங்கள் கட்சியின் 'சங்கதி' என்ன?'

ஒட்டுக் காங்கிரசுத் தலைவருக்கு சி. டி. தண்டபாணி கடிதம்

கோவை, நவ. 6—

நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி, ஒட்டுக் காங்கிரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் கிளைக் கழகத் தோழர்கள் மட்டுமல்லாமல், அவர்கள் உறவினர்களும் சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும் என்று பொதுமேடையில் சொல்லிவிட்டு, பதிலுக்குக் கூடக் காத்திராமல் கழகத்தை விட்டுத் தாங்கள் வெளியேறியிருக்கின்றீர்கள்.

மக்களுக்குத் தொண்டு செய்கின்ற ஒவ்வொரு அரசியல்வாதியும் தங்களைத் தூய்மையானவர்கள் என்று வெளியுலகுக்குக் காட்டிக் கொள்வதோடு தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்வது அவசியம் தான்.

தி. மு. கழகத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல -- எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் தங்கள் சொத்துக் கணக்குகளைக் காட்டுவது நல்லது என்பதை ஒப்புக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இந்தப் பிரச்சினையை எழுப்பிய தாங்களும் -- தங்களைச் சார்ந்தவர்களும் சொத்துக் கணக்குகளைக் காட்டி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வீர்கள் என்றும் நம்புகின்றேன்.

உதாரணமாக, 1967-லிருந்து நான் நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினராகப் பணியாற்றுகின்றேன்; தங்கள் கட்சியின் மாநில அமைப்பாளர் நண்பர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி. அவர்கள், 1972-லிருந்துதான் உறுப்பினராக இருக்கின்ருர்; 1967-க்கு முன்பும் -- அதற்குப் பிறகும் எங்கள் இருவருக்கும் இருக்கின்ற சொத்துக் கணக்குகளையும், தாங்கள் -- முனு ஆதி -- வேலப்பன் ஆகிய மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் -- அதுபோலவே கோவை மாவட்டத்தில் உள்ள தாங்களே கூறும் ஏதாவது மூன்று தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய ஆறு பேர்களுடைய சொத்துக் கணக்குகளையும், அவர்தம் உற

(4-ம் பக்கம் பார்க்க)

நல்லவர்களே -- நடுநிலையாளர்களே!

தமிழ்நாட்டில் சட்டம்--ஒழுங்கு கெட்டுவிட்டதாக அலறும் எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்கிருேம் --

தமிழ்நாட்டில் கடந்த 25 ஆண்டுக்கால வரலாற்றில் எப்போதாவது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டதுண்டா?

1942 ஆகஸ்டுப் போராட்டத்தின்போது எங்கோ சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக நினைவு! அதைத் தவிர்த்து--சுதந்தரம் கிடைத்த பிறகு, காங்கிரசார் ஆண்ட காலத்திலும் சரி--கழக ஆட்சியிலும் சரி--அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதா?

1965 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, பக்தவத்சலம் ஆட்சியின் கடுமைத் தர்பாரில்கூட ஊரடங்கு உத்தரவு தமிழ்நாட்டின் எந்த ஊரிலும் பிறப்பிக்கப்படவில்லையே!

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைவிடவா தமிழ்நாட்டில் கட்டுக்கடங்காத ஒரு நிலை ஏற்பட்டுவிடப் போகிறது? பக்தவத்சலம் ஆட்சியை விடவா ஓர் ஆட்சி அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்?

அதே நேரத்தில் வட நாட்டை எடுத்துக்கொண்டால், கடந்த 25 ஆண்டுக் காலத்தில் எத்தனை எத்தனை வகுப்புக் கலவரங்கள்--இனக் கலவரங்கள்--மொழிவாரி மாநிலக் கிளர்ச்சிகள்--மாணவர் வன்செயல்கள்!

கலவரங்களை அடக்குவதற்கு எத்தனைத் துப்பாக்கிச் சூடுகள்--எத்தனை இடங்களில் எத்தனை முறை ஊரடங்கு உத்தரவுகள்--அவற்றையெல்லாம் விரல் விட்டு எண்ண முடியுமா?

இதோ--இப்போதுகூட அசாமில் மொழிக் கிளர்ச்சி--கத்திக் குத்து--கொள்ளை--தீவைப்பு--25 பேர் பலி--நிலைமையைச் சமாளிக்க இராணுவம் வரவழைப்பு--பல நகரங்களில் ஊரடங்கு உத்தரவு!

தமிழகத்தில் சட்டம்--அடியோடு குலைந்துவிட்டது என்றும, மத்திய அரசு தமிழகத்தை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் இங்குள்ள பக்தவத்சலங்கள் கூறுவது மட்டுமன்றி இங்குவந்து போகும் மத்திய அமைச்சர்கள் சிலரும் கூறுகிருர்கள்.

தமிழ்நாட்டின் நலத்தில் உண்மையான அக்கறையுள்ள நல்லவர்களே -- நடுநிலையாளர்களே -- சற்று எண்ணிப்பாருங்கள்

சட்டம் -- ஒழுங்கு கெட்டிருப்பது வடநாட்டிலா -- தமிழகத்திலா என்பதை!

இந்தி இனத்தின் ஆட்சிக்கு மனுப் போடுவோர் சூடு -- சொரணையற்றவர்கள்

வெட்கங் கெட்டவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லையா?

சென்னை, நவ. 6—

" ஏதோ புரட்சி என்கிருர்கள் -- போராட்டம் என்கிருர்கள் -- நடத்தட்டும்; ஆனல், மத்திய அரசுக்கு மனுப் போடுகின்ற காரியத்தை மட்டும் அவர்கள் செய்ய வேண்டாம்.

" 'உள்ளாட்சித் துறைகளை மாநில அரசு கலைத்துவிடவில்லையா -- நகராட்சிமீது நடவடிக்கை எடுக்கவில்லையா -- அதுபோலத்தான் மத்திய அரசுக்கு மனு அளிப்பதும்' என்று அவர்கள் இதற்கு உதாரணம் காண்பிக்கின்றனர்; அரசியலில் ஆரம்ப அறிவு பெற்றவர்களுக்குக்கூட, 'இது சரியல்ல' என்பது தெரியும்.

" இங்கே நடப்பது மாகாண ஆட்சி அல்ல -- பிரதேச ஆட்சி அல்ல; வானெலியில் கூறுவதுபோல், பிராந்திய ஆட்சி அல்ல; இது, தமிழ் இனத்தின் ஆட்சி!

" டெல்லியில் நடப்பது இந்தி இனத்தின் ஆட்சி -- இதை மறந்து விடாதீர்கள்; அந்த ஆட்சியை, 'பல மொழி இனத்தின் ஆட்சி' என்று சொல்லலாம்; ஆனல் உண்மையில், டெல்லி ஆட்சி இந்தி இனத்தின் ஆட்சிதான்!

" இந்தத் தமிழகத்து ஆட்சியின் 'தலை விதி'யை நிர்ணயிக்க இந்தி மொழி ஆட்சிக்கு மனுப் போடுவோம் -- என்பவர்கள், தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது?

" 'மாநில சுயாட்சி என்ருல், இலஞ்சம் வாங்கிப் பிழைக்க வேண்டுமா?' என்கிருர்கள்; அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்— 'இலஞ்சம் வாங்குவது தமிழனுக்குத்தான் கைவந்த கலை என்று சொல்லுவது. தமிழ் இனத்தையே அவமதிப்பதாகும்' என்று! வெட்கப்பட வேண்டாமா இப்படிச் சொல்வதற்கு அவர்கள்? சூடு -- சொரணை சிறிதளவேனும் இருக்க வேண்டாமா?

" இவர்கள் சொல்லுவதையெல்லாம் பார்த்தால், 'தமிழ்நாட்டில் தான் இலஞ்சம் வாங்கப்படுகிறது -- மற்ற மாநிலங்களில் அது கிடையாது' என்பதுபோல் இருக்கிறது; இந்த வெட்கங் கெட்டவர்களின் பேச்சைத் தமிழர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்ருல் -- என்னவென்பது? எவ்வளவு கேவலமான வாதம் இது?

" இப்படிக் கூறுபவர்கள், 'மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் இலஞ்சம் வாங்குகிருர்கள் என்று கூறப்பட்டிருக்கிறதே -- அதுபற்றி யாருக்கு மனுப் போடப்போகிருர்கள்' என்று கேட்கப்படும் கேள்விக்கும் பதில சொல்லியாக வேண்டும்.

" பூனவில் கூடிய சிண்டிகேட் காங்கிரசுக் கூட்டத்தில், 'மத்திய ஆட்சியிலுள்ள இந்திரா காங்கிரசார் இலஞ்சம் வாங்குகின்றனர் -- இலஞ்சம் வாங்குவதை ஊக்குவிக்கின்றனர்--உத்தியோகங்களைக்கூடக் கட்சிக்காரர்களுக்கே ஒதுக்குகிருர்கள்' என்றெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது!

" இங்கே எந்தக் குற்றச்சாட்டைக் கலைஞர் ஆட்சிமீது காமராசர் சொல்கிருரோ -- அதே குற்றச்சாட்டைக் காமராசர் கட்சி -- மத்தியிலுள்ள இந்திரா காங்கிரசு ஆட்சிமீது சொல்லியிருக்கிறது; சுப்பிரமணியமும் -- மோகன் குமாரமங்கலமும் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிருர்கள்?

" மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் இலஞ்சம் வாங்குகிருர்கள் என்ருல், அதனை மக்களிடத்திலே எடுத்துச்சொல்லி -- அடுத்த தேர்தலிலே அவர்களை முறியடிப்பது ஒன்றே மார்க்கமாகும்; மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் அப்படிச் செய்கிருர்களென்ருல் அதற்கு அதுதான் வழி!

" இந்த ஆட்சி இலஞ்சம் வாங்கியது எனக் கூறப்படும் கூற்றை வாதத்திற்காக ஒப்புக்கொள்வோம்; அப்படியானல், அதை மக்களிடம் எடுத்துச் சொல்வோம் -- நியாயம் எது என்று பார்ப்போம் -- உண்மை என்றிருந்தால் வீட்டிற்கு அனுப்புவோம் -- அதுதானே பரிகாரம் -- முதலில் அதைச் செய்ய அவர்கள் முன் வரட்டும்!"

—சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

(தமிழ் மாநிலம் அமைந்த 16-ம் ஆண்டு நிறைவு விழாவில்)

ஆசிரியருக்கு மடல்கள்

அண்ணுவின் தம்பியா இவர்?

ஐயா,

பேரறிஞர் அண்ணு அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்ததன் காரணமாகவே பேரும் புகழும் -- அந்த அளவுக்குப் பணமும் சேர்த்துக்கொண்ட நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன், இப்போது அண்ணு அமைத்த கழகத்தை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிருர்; இந்த அழிவு வேலைக்குப் 'புனிதப் போர்' என்ற பெயரிட்டு, இதற்கும் அண்ணுவின் பெயரையே பயன்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்ற முயலுகிருர்!

அண்ணுவின் பெயரைச் சொல்லி வளர்த்தவர் -- அண்ணுவின் கட்சியால் 'பெரிய மனிதர்' ஆனவர் -- இப்போது சுயநலம் கருதியே அண்ணுவின் கட்சியைக் காட்டிக்கொடுக்கும் வகையில் எதிர் முகாம் அமைத்துள்ளார்; அண்ணுவின் பெயரைக் கட்சிக்குச் சூட்டியிருப்பதும் -- அண்ணுவின் கொள்கையே தனது கட்சியின் கொள்கை என்று அறிவித்திருப்பதும் வெறும் ஏமாற்றுவேலை என்பதை போகப்போக மக்கள் புரிந்துகொள்வார்கள்!

சினிமா உலகிலும் சரி—அரசியல் துறையிலும் சரி—எம். ஜி. இராமச்சந்திரனின் திருவிளையாடல்கள் எப்படிப்பட்டவை என்பதை நான் கடந்த இருபது ஆண்டுகளாக அறிவேன்; தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி—பொது வாழ்க்கையிலும் சரி—அவரைப் பற்றிய பல அந்தரங்கத் தகவல்களை நான் மட்டுமல்ல -- என்போன்ற பலரும் அறிந்து வைத்திருக்கிருர்கள்.

அவர் இதுநாள் வரை அரசியல் போர்வையில் எல்லாவற்றையும் மறைத்துவந்திருக்கிருர்; இனியும் மறைக்க முடியாது; எல்லாம் அடுத்தடுத்து தாமே வெளிப்படும் என்பதால், நான் அவற்றையெல்லாம் இப்போது வெளியிடத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

ஏதோ அறிஞர் அண்ணுவின்மேல் தனக்கு அபார பக்தியிருப்பது போலவும், அண்ணுவின் நம்பிக்கைக்குரிய 'தம்பி' தாமே என்றும் தம்பட்டமடித்துக்கொண்டு -- அண்ணுவின் பெயரைச் சொல்லிக் கட்சி நடத்தும் இந்த மனிதர், அண்ணுவின்மீது உண்மையான -- இதயபூர்வமான பற்றும் பாசமும் கொண்டவர்தானு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணு மறைந்து மூன்ருண்டுக் காலத்துக்குப் பிறகு, இப்போதுதான் அண்ணு பெயர் இந்தப் புரட்சி நடிகரின் நினைவுக்கு வந்திருக்கிறது; அதவும், அண்ணுவின் கட்சிக்கும் -- அரசுக்கும் எதிராகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள கட்சிக்கு அந்தப் பெயரைச் சூட்டியுள்ளார்.

அண்ணு அவர்கள் உயிரோடு இருந்தபோது தனது ஸ்தாபனங்களில் ஏதாவது ஒன்றிற்கு அண்ணுவின் பெயரைச் சூட்டினரா இந்தப் பாரி வள்ளல்?

இவருடைய படக் கம்பெனிக்குப் பெயர் எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்; இவர் கோடம்பாக்கத்தில் நடத்தும் பள்ளிக்குப் பெயர் எம். ஜி. ஆர். பள்ளி; கோடம்பாக்கத்தில் வைத்திருக்கும் திடலுக்குப் பெயர் எம். ஜி. ஆர். திடல்; கோடம்பாக்கத்தில் சில ஆண்டுகளுக்குமுன் இவர் இலவச மருத்துவமனை என்ற பெயரால் துவக்கி -- சில மாதங்களில் மூடு விழா நடத்திவிட்ட மருத்துவமனையின் பெயரும் எம். ஜி. ஆர். மருத்துவமனை; எழும்பூரில் சிறிது காலம் ஒரு 'பெட்ரோல் பங்க்' நடத்தினர் -- அதன் பெயரும் 'எம். ஜி. ஆர். என்டர் பிரைசஸ்'; சில ஆண்டுகளுக்குமுன் அறக் கட்டளை ஒன்றைத் துவக்கினர் -- (அது இன்று இருக்கிறதோ இல்லையோ) -- அதன் பெயரும் எம். ஜி. ஆர். அறக் கட்டளை; வேறு இரண்டொரு ஸ்தாபனங்களுக்குத் தனது தாயார் பெயர்.

மற்றப்படி, எந்த ஒரு ஸ்தாபனத்துக்கும் அண்ணுவின் பெயரை வைக்க இந்தக் 'கொடை வள்ள'லுக்கு மனம் இடம் கொடுத்ததில்லை; இப்படிப்பட்டவர்தான் இன்று அண்ணுவின் கொள்கையைக் காக்க -- அண்ணு பெயரால் கட்சி அமைத்திருப்பதாக அறிவித்திருக்கிருர்.

பேரறிஞர் அண்ணு அவர்கள் இவர்மீது என்ன கருத்துக்கொண்டிருந்தார் என்பதையும் நான் நன்கு அறிவேன்; நாளடைவில் ஒவ்வொன்ருக வெளியிடுவேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உண்மை விளம்பி'
சென்னை-24

கலைவாணர் வழிவந்தவரா?

ஐயா,

கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் இல்லாத குறையை நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ஈடுசெய்வார் என்று என்போன்ற பழம்பெரும் இயக்கத் தோழர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர். கலைவாணர் எங்கே -- எம். ஜி. இராமச்சந்திரன் எங்கே? நமது கணக்குத் தப்புக் கணக்கு என்பது புலப்பட்டுவிட்டது.

கலைவாணருடன் இந்த நபரை ஒப்பிடுவதே கலைவாணருக்கு இழுக்கு ஏற்படுத்துவதாகும் என்பதை நாடே உணர்ந்துவிட்டது.

வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் கொடுத்துக் கொண்டே இருந்தார் கலைவாணர்; இன்றைய 'பறங்கிமலை பாரி வள்ளலோ' 'அண்ணுவுக்கு வைத்திய செலவுக்குக் கொடுத்தேன் -- மதுரை முத்துவுக்குக் கொடுத்தேன்; அவருக்குக் கொடுத்தேன் -- இவருக்குக் கொடுத்தேன்' என்று அடுக்கிக் கொண்டே போகிருர்!

இவர் கொடுத்தது உண்மை என்ருல் எதற்காகக் கொடுத்தார் -- ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுத்திருப்பார் என்பது தானே? என். எஸ். கே. இப்படியா நடந்துகொண்டார்? அவர் தம் வாழ்நாளில் வாரி வழங்கிய தொகையின் அளவை இன்று கூட எவ்வளவு என்று யாராலும் கூற முடியாதே!

மு. மாணிக்கம்
மன்னர்குடி

அரசியலில் விளையாடாதீர்!

ஐயா,

மாஜி 'புரட்சி நடிகர்' இன்றைய பு...ர்...ர...ட்...சி...த்...தலைவர் (?) வருகிற நவம்பர் பத்தாந் தேதி ஏதோ பெரிய புரட்சி நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

சினிமாவில் இவர் செய்யும் 'புரட்சி'களைப் பார்த்துக் கைதட்டியவர்களையும், விவரமறியா பள்ளி மாணவர்களையும் நம்பியே இவர் புதுக்கட்சி ஆரம்பித்திருக்கிருர்; அவர்களைத் தூண்டிவிட்டே புரட்சி நடத்தி இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று கருதுகிருர் போலும்! இவரை நம்பி எதிர்க்கட்சிகளும் நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கின்றன.

அரசியல் கட்சி நடத்துவதும்—அரசைக் கவிழ்ப்பது என்பதும், சினிமா ஷூட்டிங் போன்றதல்ல என்பதை அவர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

" தமிழ்நாட்டு இளைஞர்களையும் -- மாணவர்களையும் வைத்து விளையாட்டு நடத்தவேண்டாம்; அவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்க வேண்டாம்" என்று அவரை எச்சரிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் நிகழ்காலமும் -- எதிர்காலமும் பேரறிஞர் அண்ணுவால் உருவான தி. மு. கழகத்தின் கையில்தான் உள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜி. சீனிவாசன்
திருப்பெரும்பூர்

போலி வேடம் போடுகிருர் 'புரட்சி' நடிகர்!

ஐயா,

அண்ணு பெயரைச் சொல்லிக் கட்சி ஆரம்பித்திருக்கும் நடிகர் இராமச்சந்திரன், அண்ணுவின் கொள்கையே தனது கட்சியின் கொள்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிருர்; ஆனல் அவரது முக்கிய இலட்சியம், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பது ஒன்றுதான் என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது! அவருடைய ஒவ்வொரு பேச்சும் செயலும் இதைத்தான் வெளிப்படுகிறது!

பேரறிஞர் அண்ணு அவர்கள், அன்றைய எதிர்க் கட்சிகளையெல்லாம் சேர்த்துக் கூட்டணி அமைத்து -- காங்கிரசு ஆட்சியை ஒழித்து -- தி.மு.க. ஆட்சியை ஏற்படுத்தினர்; இவரோ -- இன்றைய எதிர்க் கட்சிகளையெல்லாம் கூட்டணி சேர்க்கிருர்--தி.மு.க. ஆட்சியை ஒழிக்க! இதுதான் அண்ணு அவர்களுக்குக் காட்டும் மரியாதையா? அண்ணுவின் உண்மையான தொண்டன் செய்யும் காரியமா?

'அண்ணுவின் கொள்கையிலிருந்து தி.மு.க. தவறிச் செல்கிறது' என்று இராமச்சந்திரன் கருதுவாரானல், கட்சிக்குள்ளேயே அதனை எடுத்துச் சொல்லி--கழகத்தை அண்ணு வழிக்குத் திருப்ப முயற்சி செய்திருக்க வேண்டாமா? அதை விடுத்து, கலைஞரைப் பதவியிலிருந்து இறக்குவதுதான் தன் முதல் வேலை என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிவது ஏன்?

தமிழ் மக்கள் நடிகர் இராமச்சந்திரனின் போலிவேடத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சக்கரபாணி
தவுட்டுர்

ஒட்டுக் காங்கிரசாரின் சமூக விரோத செயல்கள்

தி. மு. க. வழக்கறிஞர்கள் சங்கம் கண்டனம்

சென்னை, நவ. 6—

சென்னை உயர் நீதிமன்ற தி. மு. க. வழக்கறிஞர்கள் சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம், சங்க தலைவர் நா. கணபதி தலைமையில் நடந்தது; அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) கழகக் கட்டுப்பாட்டை மீறிக் கழகத்திற்கு மாசு ஏற்படும் வகையில் திட்டமிட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த எம். ஜி.ஆர்.மீது தகுந்த நடவடிக்கை எடுத்த தலைமை கழகத்தை இச் சங்கம் பாராட்டுகிறது.

(2) அண்மைக் காலமாகத் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்ட எம். ஜி. ஆரின் ஆதரவாளர்கள் நடத்தும் வன்முறைச் செயல்களை இவ்வழக்கறிஞர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதனைப் பின்னின்று தூண்டுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

(3) இந்தியத் துணைக்கண்டத்தில் சிறப்பான ஆட்சி நடத்திவரும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீது காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்குத் துணையாக நின்று -- சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு, சட்டம் -- ஒழுங்கு ஆகியவைகளைச் சீர்குலைக்க முயற்சித்து அதன் மூலம் மத்திய அரசின் துணையுடன் தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கச் சதிசெய்யும் சமூக விரோதிகளையும், அவர்களுக்குத் துணைபுரிபவர்களையும் இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(4) தமிழகத்தில் தனிச் சிறப்பும் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பெயர் சூட்டி வளர்த்த பேரறிஞர் அண்ணு அவர்களின் கருத்துக்கும் -- முறைக்கும் மாருகக் கழகத்தையே அழிப்பதற்கு அண்ணுவின் புகழுக்கும் -- குறிக்கோள்களுக்கும் களங்கம் விளைவிக்கின்ற துரோகச் செயலில் ஈடுபடும் எம். ஜி ஆரையும் -- அவரது ஆதரவாளர்களையும் இச் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது."

புனிதப் பெயரைக் களங்கப்படுத்தாதீர்

ஐயா,

புனிதமான அண்ணுவின் பெயரை வைத்துப் புதுக்கட்சி தொடங்கியிருப்பவரையும், அவரைப் பின்பற்றிச் சென்றிருப்பவர்களையும் பார்க்கும்போது, 'இப்படிப்பட்டவர்களிடமா அண்ணுவின் இலட்சியம் வாழும்?' என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

போகிறவர்கள் போகட்டும் -- நாம் அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை. இப்படிப்பட்டவர்கள் கழகத்தில் இருந்தாலும் ஒன்றுதான் -- இல்லாவிட்டாலும் ஒன்றுதான்; ஆனல், போகிறவர்கள் அண்ணு பெயருக்குமா களங்கம் விளைவிக்கவேண்டும்?

அவர்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன் -- தயவு செய்து அண்ணுவின் பெயரையும், அண்ணுவின் இருவண்ணக் கொடியையும் விட்டுவிடுங்கள்; வேண்டுமானல் ஈ. வி. கே. சம்பத் கண்டுபிடித்தும் பயன்படுத்திய கட்சியின் பெயரையும் -- அதன் கொடியையும் உயிர்ப்பித்துப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். சம்பத் காட்டிய வழியில்தானே நீங்களும் அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள்!

துரோகிகளின் கூடாரத்துக்கு அண்ணுவின் பெயர் வேண்டாம்.

பு. ரா. சுப்பராயன்
காரைக்கால்

போகிற போக்கில் புழுதிவாரித் தூற்றுவதா?

ஐயா,

தி. மு. கழகத்தை விட்டு வெளியேறக் கடந்த ஏழெட்டு மாதங்களாகவே திட்டமிட்டுச் செயல்பட்டுவந்த புரட்சியார், இப்போது போகிறபோக்கில் தி. மு. கழகத்தவர்மீது களங்கம் ஏற்படுத்தும்வகையில் வீண் பழி சுமத்திவிட்டுச் சென்றிருக்கிருர்.

இவர் ஏதோ தாம் சம்பாதித்ததையெல்லாம் கழகத்துக்கும் -- கழகத் தோழர்களுக்குமே வாரி வழங்கிவிட்டதைப்போலப் பேசி ஊரை நம்பவைக்கப் பார்க்கிருர்!

கழகத்திற்கென்று அவர் என்ன செய்திருக்கிருர்? உருப்படியாக எதையாவது சுட்டிக்காட்ட முடியுமா? எந்தெந்தக் கழகத் தோழர்கட்கு எவ்வளவு வாரி வழங்கியுள்ளார் -- எதற்காக வழங்கினர் -- எப்போது வழங்கினர் -- பட்டியல் போட்டுக் கணக்குக் காட்டத் தயாரா?

கழகத் தலைமை நிலையக் கட்டிடம் (அறிவகம்) வாங்குவதற்கு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர்கள், நாடகம் நடத்திப் பணம் திரட்டிக் கொடுத்தார்; கழகத்தின் சொந்த நிதியிலிருந்து 'அன்பகம்' வாங்கப்பட்டது.

புரட்சியார் நன்கொடைமூலம் கழகத்திற்குக் கிடைத்த சொத்து எது? கழகச் சார்பில்லாத வேறு பல ஸ்தாபனங்களுக்கு -- புகழ் விரும்பி அவர் நன்கொடை வழங்கியிருக்கலாம்; தி. மு. கழகத்துக்கு என்று எவ்வளவு வழங்கியுள்ளார்?

புரட்சியாரைப் பொறுத்தவரையில், தனக்கு எந்த அளவுக்கு விளம்பரம்—புகழ் கிடைக்கும் என்பதைப் பார்த்துத்தான் பணத்தைச் செலவிடுவாரே தவிர, கண்ணை மூடிக்கொண்டு கலைவாணர் போல், 'இல்லை'யென வந்தவர்களுக்கெல்லாம் வழங்கிவிடமாட்டார்; அவர் இயல்பு தெரிந்தவர்களுக்குத்தான் இந்த உண்மை தெரியும்.

ம. நடராசன்
சென்னை—18.

நினைப்பது நிறைவேறுமா?

ஐயா,

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தாம் நினைத்தபடி முதல்வர் கலைஞரும் -- கழகமும் நடக்க வேண்டும்' என்று விரும்பினர்; தனது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கழகத்தைப் பயன்படுத்த முடியாததால் வெளியேறி கழகத்தையே பழிதீர்த்துக்கொள்ள முனைந்திருக்கிருர்.

'நினைத்ததை முடிப்பவன்' என்பதெல்லாம் சினிமாவில் நடக்கலாம் -- தமிழ்நாட்டின் அரசியலில் மட்டும் அது பலிக்காது என்பதை அவர் உணர்ந்து கொள்ளும் நேரம் வெகு தொலைவில் இல்லை.

எஸ். பக்கிரிசாமி
தாம்பரம்

காலம் தீர்ப்பு அளிக்கும்

ஐயா,

நடிகர் எம். ஜி இராமச்சந்திரனல் சினிமா உலகத்தில் பழிவாங்கப்பட்டவர்கள் ஏராளம்; பல நடிகர்கள் தங்கள் தொழிலை விட்டு விட்டும் சென்றுவிட்டனர்; பல படமுதலாளிகள் பராரியாகிவிட்டனர்; இந்த நடிகர் கொடுத்த தொல்லையினலேயே சில படமுதலாளிகள் இருந்ததையும் இழந்து -- தெருவில் அலைந்து மாண்டுபோய் விட்டனர்.

சினிமா உலகத்தில் அவர் செய்த திருவிளையாடல்கள் போதாது என்று இப்போது அரசியலிலும் விளையாட ஆரம்பித்திருக்கிருர்.

இது தமிழ்நாட்டுக்குப் போதாத காலமா -- அவருக்குப் போதாத காலமா என்பதை விரைவில் காலம் அளிக்கும் தீர்ப்பு மூலம் நாடு அறியப் போகிறது!

இரா. நாராயணசா[மி]
கும்பகோண[ம்]

...த்தர்கள் புரட்டு எத்தனை நாளைக்கு?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலில் அந்தப் பாட்டு செல்லுபடியாகாது என்று அந்தப் பெரிய மனிதருக்கு யார் சொல்லுவது?

'பத்தாம் தேதி நாடே ஸ்தம்பிக்கப் போகிறது' என்றார்; 'வீட்டை விட்டு யாரும் வெளியே வரமாட்டார்கள்' என்றார்; 'கடைகள் மூடிக் கிடக்கும் -- அலுவலகங்கள் நடக்காது -- தொழிலாளர்கள் வேலைக்குப் போகமாட்டார்...ள்' என்றெல்லாம் கூறினார்; ...து ஒரு நாள்—இரண்டு நாள் ...ல -- பல நாள் தொடரும்' ...ரார்; 'மக்களே இந்த முடி...் செய்து விட்டார்கள்' ...று சொன்னார். (இப்போது ...ர்த்தால் பத்தாம் தேதி ...லை; எப்போது நடக்கும் என் ... இப்போது தெரியாது என்று ... விரைவில் நடக்கப்போவது ...ரமை' என்று சொல்லியிருக் ...)

... மக்கள் எங்கே கூடி -- எப்...து இந்த முடிவைச் செய்து-- ...தப் புரட்சித் தலைவருக்கு அறி...தார்கள்? அல்லது 'இப்படிச் ...ய வேண்டும்' என்று இந்தப் ...சித் தலைவர் முடிவு செய்து ...ளுக்கு அறிவித்தாரா? இந் ...ந்தேகம் என்னைப்போலவே ...லாருக்கும் எழும் என்று ...றேன்.

...னும் அந்த மக்களில் ஒருவன்தான் என்பதை மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பெற்றோர்களை வெளியில் செல்ல வேண்டாம் என்று பிள்ளைகள் முடிவு செய்திருக்கிறார்களாம்; நானும் பெற்றோர்கள் பட்டியலில் உள்ளவன்தான்; அதே நேரத்தில், எனக்கும் பெற்றோர்கள் இருக்கிறார்கள் -- அவர்கட்கு யார் அப்படிச் சொல்லுவது?

'தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏகப் பிரதிநிதி எம். ஜி இராமச்சந்திரன்தான்' என்று -- எப்போது அவரிடம் மக்கள் சொன்னார்கள்?

நான் மட்டுமல்ல -- என்னோடு இந்திரா காங்கிரசுக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரமும் இருக்கிறார்கள் என்று அவர் சொல்லுவாரானால், இந்த மூன்று பேர்களுந்தான் தமிழ்நாடே அடக்கமா? இந்தச் சந்தேகங்களையெல்லாம் ...ரட்சி வீரர் நிவர்த்திக்க வேண்டும்.

தி. மு. கழகத்தை ஆட்சிபீடத்தில் ஏற்றிவைத்தவர்கள் மக்கள்; அதே மக்கள் இப்போது தி. மு. கழகத்தை விரும்பவில்லை என்று இந்த 'இராமச்சந்திரப் பிரபு' கூறுவாரானால், அதற்குரிய காலம் வரட்டும்; அடுத்த தேர்தல் வரை பொறுத்திருக்கட்டும் -- அப்போது தேர்தல் களத்தில் சந்திப்போம்!

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதுதான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை; 'எம். ஜி. இராமச்சந்திரன் குரலே மக்கள் குரல்' என்று அண்ணாவும் சொன்னதில்லை -- வேறு எந்த சனநாயகவாதியும் கூறியதாகத் தகவல் இல்லை.

...த்தாம் தேதியோ -- அதற்குப் பிறகோ அர்த்தால் நடைபெறட்டும்; அதையும் பார்க்கத்தான் போகிறது தமிழகம்! அதுவரையில் நாளுக்கு ஓர் அறிக்கை -- வேளைக்கு ஒரு திட்டம் தந்து கொண்டே இருக்கட்டும் -- புரட்சித் தலைவர்!

— மா. சே.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்தப் புதிய கட்சியின் நோக்கம் என்ன -- அதன் தலைவரின் குறிக்கோள் என்ன? -- 'கருணாநிதி முதலமைச்சராக இருப்பதா -- நாவலர்; அமைச்சராக இருப்பதா -- அன்பழகன், நடராசன், அன்பில இவர்கள் எல்லாம் அமைச்சர்களா இருப்பதா -- இவர்கள் எல்லாம் இருக்கக்கூடாது -- கழக ஆட்சியே இருக்கக் கூடாது -- அதற்கு யாரோடும் நான் கூட்டுச் சேருவேன்' என்பதுதான்!

கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரம் முதலில் விவசாயிகளோடு கூட்டுச் சேர்ந்தார்; அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைக் கவிழ்க்கலாமா என்று பார்த்தார் -- முடியவில்லை, இப்போது, விவசாயியாக வேடம் போட்டவர்களோடு கூட்டுச் சேர்ந்து கவிழ்க்கலாமா என்று பார்க்கிறார்; 'முடியவே முடியாது' என்பதை மாத்திரம் கம்யூனிஸ்டுகளுக்குச் சொல்லிக் கொள்கிறேன்,"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]

சுருளிவேல் எம்.எல்.ஏ.

சுற்றுப்பயணம்

நவ. 7; ஏற்காடு; 8 காலை ஈரோடு; -- மதியம்; சேலம்; 9, 10; போடிநாயக்கனூர்; 11; திண்டுக்கல்--தி. மா மு க. பொதுக்கூட்டம்; 12 முதல் சட்டமன்ற கூட்டம் முடியும் வரை சென்னை.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வினர்கள் -- வியாபாரக் கூட்டாளிகள் ஆகியோரின் கணக்குகளையும் நீங்களே விரும்புகின்ற நீதிபதிகள் முன்னிலையில் வைத்து, நம்மை நாமே தூய்மையானவர்கள் என்று அரசியல் உலகிற்குக் காட்டிக்கொள்வது அவசியம் எனக் கருதுகிறேன்.

தாங்களும் -- தங்களைச் சார்ந்தவர்களும் தூய்மையானவர்கள் என்பதைக் காட்ட என் கருத்தினை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்; தங்களது பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்."

வன்முறையைத் தூண்டும் வலது கம்யூனிஸ்டுகள்

கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு முன்னுதாரணமாகின்றனர்

எளியவர் வாழ்வை உயர்த்திடும் அரசைக் கவிழ்க்க எவருடனும் கூட்டுச் சேர முனைந்து நிற்கும் விசித்திரம்

சென்னை, நவ 6—

"தி. மு. கழக அரசுக்கு எதிராக எந்த ஒரு சிறு பிரச்சினை எழுந்தாலும், அதிலே நுழைந்துகொண்டு – அதன் மூலமாக மாநிலத்தில் பயங்கரமான வன்முறைகளைத் தூண்டிவிட முற்படுவது வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் கடந்தகால நிகழ்ச்சிகளாக இருந்துவந்திருக்கின்றன; அதையேதான் கம்யூனிஸ்டுக் கட்சியினர் இப்போதும் நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றனர்.

"ஏழை—எளியவர்களுடைய வாழ்க்கையை உயர்த்திடவும் – ஏற்றத்தாழ்வு அற்ற சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிடவும் பாடுபடுகின்ற ஒரு சோஷலிச அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இங்கிருக்கின்ற வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் யாருடனும் சேருவதற்குத் தயாராக இருக்கிறார்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

குற்றம் சுமத்துவோர் பொறுப்பு ஏற்பது அவசி...

வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் எம். கல்யாணசுந்தரம் கேரளத்தில் அமைச்சர்கள் ஊழல் பற்றிக் கமிஷன் போடப்பட்டதைக் குறிப்பிட்டுக் கோரியிருந்த கோரிக்கையை முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவந்து செய்தியாளர்கள் கேட்டபோது முதலமைச்சர் கூறியதாவது:—

"கேரள அமைச்சர்கள் மீது சட்டமன்றத்தில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்பட்டன; அதற்குப் பிறகு அங்கு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது; இங்கும் அதேபோல் ஆதாரங்களுடன் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் சுட்டிக்காட்டப்பட்டு -- குற்றம் சுமத்தியவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், விசாரணைக் கமிஷன் அமைப்பதில் எந்தத் தடையும் இல்லை; சொல்கின்ற குற்றச்சாட்டுக்களை எங்கு வேண்டு...லும் கூறட்டும்; ஆனால், சும...துகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்க...ண்டும்."

அப்ப... ...வது விந்தைதான்!

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மேலும் கூறியதாவது:—

"தமிழகத்தில் வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து சில இடங்களில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டதைக் குறிப்பிட்டு, 'இங்கு சட்டம் -- ஒழுங்கு அமைதி கெட்டுவிட்டது' என்று கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் கல்யாணசுந்தரம் கூறியிருக்கிறார்.

"கேரளத்தில் தனியார் கல்வி நிலையங்களை முறைப்படுத்தும் மசோதாவைத் தொடர்ந்து அங்கு கல்லூரிகளும் -- கல்வி நிலையங்களும் இரண்டு மாத காலம் மூடப்பட்டிருந்தன; ஆனால் இங்கே கல்லூரிகள் மூடப்பட்டிருப்பதை வைத்துக் கொண்டு சட்டம் -- ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் கம்யூனிஸ்டுகள் சொல்வது விந்தைதான்."

அப்படி நடந்ததா?

கேள்வி:—"ஊழல் புகார்ப் பட்டியல் கொடுக்கப்பட்டு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டதும், அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று கோரப்பட்டுள்ளதே?"

பதில்:—"கேரளத்தில் அப்படித்தான் பதவி விலகினார்களா?"

கேள்வி:—"பல வாரியங்களைச் சேர்ந்த பைல்களும் -- சான்றேடுகளும் நாசப்படுத்தப்படுகின்றன -- கடத்தப்படுகின்றன என்று தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் கல்யாணசுந்தரம் புகார் கூறியுள்ளது பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

முதல்வர்:—"பொதுவாகப் புழுதி வாரித் தூற்றினால் அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது."

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்

அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக

வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

யார் அந்த முப்பது பேர்?

புதுக் கட்சிப் புளுகுக்கு அக்கினிராஜ் மறுப்பு

சென்னை, நவ 6—

"நெல்லை மாவட்டத்தில் குலசேகரன்பட்டினம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் உட்பட 30 ஊராட்சித் தலைவர்கள் தன் கட்சியில் சேர்ந்துவிட்டதாக எம்.ஜி.ஆர். கூறிய தகவல் தவறானது"

என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது; இதுகுறித்துத் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் எஸ். அக்கினிராஜ், துணைத் தலைவர் டி. நெல்லை நெடுமாறன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"2-11-72-ல் சில நாளிதழ்களில், திருநெல்வேலி மாவட்ட குலசேகரன்பட்டினம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் உட்பட 20 ஊராட்சித் தலைவர்கள் எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்துவிட்டதாக எம் ஜி. ஆர். அறிவித்துள்ளதாகச் செய்தி வெளிவந்துள்ளது; மக்களைத் திசை திருப்பக்கூடிய ஓர் அப்பட்டமான பொய்ச் செய்தியாகும் இது!

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், 'குலசேகரன்பட்டினம் ஊராட்சி ஒன்றியம்' என்ற ஒன்று கிடையாது!

திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தப் பெயரில் ஊராட்சி ஒன்றியமே இல்லாமல் இருக்கும்போது, அந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 30 ஊராட்சித் தலைவர்கள் மாறிவிட்டார்கள் என்பது வெறும் திரித்துக் கூறப்பட்ட கட்டுக் கதையாகும்.

இதுபோன்றுதான், 'கலைக்கப்பட்டது -- சேர்ந்துவிட்டார்கள் -- ஓடிவிட்டார்கள் -- ஓடிவந்துவிட்டார்கள்' என்பதும். அரசியலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சட்டம் -- ஒழுங்கு அமைதியைக் கெடுக்க முயற்சி செய்வது, இலாபம் பெற விரும்பும் ஒரு தனி மனிதரின் செயல் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், நெல்லை மாவட்டத்தில் தி. மு. கழகத்தைச் சார்ந்த எந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரும் எம்.ஜி.ஆர். பக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

கே. டி. எஸ். மணி உடல் நிலை

மருத்துவமனையில் முதல்வர் -- நாவலர் பார்த்தனர்

சென்னை, நவ. 6—

செங்கற்பட்டு மாவட்ட தி.மு க. செயலாளரும் -- காஞ்சி நகராட்சி மன்றத் தலைவருமான திரு. கே. டி. எஸ் மணி அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

மாரடைப்புக் காரணமாகத் திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்ட திரு. கே. டி. எஸ். மணி அவர்கள் நேற்றைக்கு முன்னாள் காஞ்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; பிறகு சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று முதல்வர் கலைஞர்—நாவலர்—அமைச்சர் க. இராசாராம் ஆகியோர் கே. டி. எஸ். மணி அவர்களை மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

மருத்துவமனையில் பக்தவத்சலம்

எலும்பு முறிவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்தை முதலமைச்சர் கலைஞரும் -- நாவலரும் பார்த்து நலம் விசாரித்தனர்.

அவதூறு பேசுவோர் நீதிமன்றத்துக்கு வரட்டும்

பொதுச்செயலாளர் நாவலர் அறிவிப்பு

சென்னை, நவ. 6—

"கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த எம். பி. ஒருவர், நான் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வைர நெக்லஸ் வாங்கியதாக எழுதியிருக்கிறார்; அவரை நீதிமன்றத்தில் சந்திக்க முடிவு செய்துவிட்டேன்; நீதிமன்றத்தில் அவர் அதனை மெய்ப்பிக்கட்டும்!

"இப்படி இதைச் செய்தனர் என்று குறிப்பிட்டுச் சொல்லட்டும்; நாங்களே வழக்குத் தொடுத்து நீதிமன்றத்தில் அவர்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்!

"எங்கள் மீது சந்தேகமிருந்தால், ஒன்று--நீங்கள் வழக்குத் தொடருங்கள்; அல்லது நாங்கள் தொடருகிறோம்!

"கம்யூனிஸ்டு உறுப்பினர் முருகானந்தத்தை நீதிமன்றத்தில் சந்திக்கிறேன்--நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லட்டும்! உண்மைகளை நாடு அறியட்டும்!

—வட சென்னை கூட்டத்தில்